DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

C.C.No. 56/2024

<u>மனு தாக்கல் செய்யப்பட்டதன்பேரில் அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின்பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான்அளித்த புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் எனது கணவரும், காளீஸ்வரியும் கட்டிட வேலைக்கு சென்றபோது பழக்கம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் எனது கணவர் அடிக்கடி காளீஸ்வரியிடம் போன் பேசுவதாகவும், அதைப்பற்றி நான் கேட்டபோது என்னை எனது கணவர் சத்தம் போட்டு அடித்ததாகவும் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் என்கணவர் 2–வது எதிரியின் போட்டோவை மட்டும் எனது வீட்டில் வைத்திருந்தார் என்றும், அதைப்பார்த்து நான் சத்தம்போட்டேன் என்றும், அப்போது, எனது கணவர் என்னை கையால் கன்னத்தில் அடித்துவிட்டார் என்றும் கூறினேனா என்றால் கூறினேன். புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் நான் கோவித்துவிட்டு எனது அம்மா வீட்டிற்கு போய் 5 மாதம் இருந்தேன் என்றும் கூறினேனா என்றால் கூறினேன். என்னையும், எனது அம்மாவையும் காரியாப்பட்டியில் உள்ள எனது அம்மா வீட்டில் வைத்து 1–வது எதிரி காயப்படுத்தியதற்காக காரியாப்பட்டி காவல் நிலையத்தில் நடந்த விபரத்தைக் கூறி எனது அம்மா போலீசாரை அழைத்து வந்தார் என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் தொடர்பாக காரியாப்பட்டி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்து 1–வது எதிரிக்கு எதிராக வழக்கு எதுவும் பதியப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்தவுடன் நான் அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்கரன்கோவிலில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் நான் சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி திருநெல்வேலி காவல்துறை, கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை என் ஊரில் உள்ள என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது மகன் சேலத்தில் கல்லூரியில் படித்து வந்தபோது பணம் கட்ட முடியாமல் போனபோது கல்லூரியில் நடந்த விபரத்தைக் கூறியபோது அவர்கள் அதுதொடர்பாக புகார் மனு கொடுத்து வழக்கு பதிவு செய்து வாருங்கள் என்று சொன்னதன்பேரில் புகார் மனு கொடுத்தேன் என்றால் காவல்துறை கண்காணிப்பாளரிடம் கல்லூரியில் இருந்து கேட்டதன்பேரில் புகார் மனு கொடுத்தேன். அதற்குமுன்பு நான் கொடுத்த புகார் மனுமீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. 1–வது எதிரி தற்போது எனது மகன்களின் வீடுகளுக்கு சென்றுவருவார் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

C.C.No. 56/2024
தேதி 12.02.2026

மனு தாக்கல் செய்யப்பட்டதன்பேரில் அ.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின்பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். 1–வது எதிரி 2–வது எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தது பற்றியும், இரு எதிரிகளும் அ.சா.1 க்கு எதிராக கொலை மிரட்டல் விடுத்தது பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1–வது எதிரி தற்சமயங்களில் எனது வீட்டிற்கு வந்து போவதுண்டு என்றால் சரிதான். போலீசார் விசாரணையில், எனது அம்மாவிற்கு ஏற்பட்ட பயத்தால் விருதுநகரில் உள்ள எனது பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டு என்னையும், எனது தம்பியையும் பார்ப்பதற்கு ஊருக்கு திரும்பிவிட்டார் என்று கூறினேனா என்றால் கூறினேன். எந்தக் காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் தாலுகா காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள்.
ம.வி. இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

C.C.No. 56/2024
தேதி 12.02.2026
மனு தாக்கல் செய்யப்பட்டதன்பேரில் அ.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின்பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தற்சமயங்களில் எனது தந்தை என் வீட்டிற்கு வந்து செல்வார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எனது தந்தை எங்களை கைவிட்டுவிட்டு கேரளாவிற்கு வேலைக்கு செல்வதாகக் கூறிவிட்டு சென்றுவிட்டார் என்று கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் எனது அண்ணனின் படிப்புச் சான்றிதழை வாங்குவதற்காக போலீசில் எனது அம்மா புகார் கொடுத்தார் என்று கூறினேனா என்றால் கூறினேன்.
ம.வி. இல்லை.